www.Padasalai.Net www.TrbTnpsc.com

Ranipet - Dist

# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

**R**

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத் தமிழ்

நேரம் : 3.00 மணி | பகுதி - I | மதிப்பெண்கள் : 90

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடைய்யைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதுக.

14 x 1 = 14

1. பொருத்தமனாவற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதைமொழியும்
2. பாயிரம் இல்லது ______ அன்றே
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
3. 'தகப்பன் கொடி' புதினத்தின் ஆசிரியர் யார்?
   அ) பிரமிள் ஆ) சு. வில்வரத்தினம்
   இ) பேயனார் ஈ) அழகிய பெரியவன்
4. செங்கயல் - இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) உருவகம்
5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி , இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
   இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி , விகுதி
6. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ______
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
7. சரியானதைத் தேர்ந்தெடுக்க.
   அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்
   இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்
   i) அ , ஆ , இ - சரி ; ஈ - தவறு ii) ஆ , இ , ஈ , - சரி ; அ - தவறு
   iii) அ , இ , ஈ - சரி ; ஆ - தவறு iv) அ , ஆ , ஈ - சரி ; இ - தவறு
8. Smart Phone - கலைச்சொல்லாக்கம் தருக.
   அ) திறன் பேசி ஆ) தொடு திரை இ) சுற்றறிக்கை ஈ) அரசிதழ்
9. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.
   அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறு பாலத்தின் சுவரில்
   இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
10. கீதாஞ்சலி என்ற கவிதை நூலிற்கு நோபல் பரிசு பெற்றவர் யார்?
    அ) பாரதிதாசன் ஆ) இன்குலாப் இ) தாகூர் ஈ) அப்துல் ரகுமான்
11. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்
    அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
    இ) நூல் தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு
12. முல்லைத் திணைக்கு உரிய உரிப்பொருள் யாது?
    அ) புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆ) இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
    இ) ஊடலும் ஊடல் நிமித்தமும் ஈ) இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

13. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில்
பயின்று வருவது . . . . . . . . . . .

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

14. ஈறுபோதல், தன்னொற்றிரட்டல், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்.

அ) நெட்டிலை ஆ) பைந்தளிர் இ) பெரியன் ஈ) கருங்கடல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 2 = 6**

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. "நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கைகளில் நெஞ்சம் படரும்"
- தொடை நயங்களை எடுத்தெழுதுக.
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19. ஆனந்தரங்களின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
20. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
21. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
23. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
தங்கை , அறிவில்லாதவன்
25. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
அ) கார் காலம் - ______ ; குளர்காலம் - ஐப்பசி, கார்த்திகை ______ - மார்கழி , தை
ஆ) சேரன் - வில் ; சோழன் - ______ ; ______ - மீன்
26. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.
அ) வேவு பார்த்திடுவான், ஓசையின்றி சென்றிடுவான் (ஆளி) - ______
ஆ) அறிவைத் தேடிப் போகுமிடம், உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ______
27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) அவசரக் குடுக்கை ஆ) முதலைக் கண்ணீர்
28. இலக்கணக் குறிப்புத் தருக:
அ) விரிகதிர் ஆ) சுடச்சுடரும்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக் கூடாது நன்மை செய்யக் கூடாது உதவியை
30. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
அ) வருடம் - ஆ) விசா -

பகுதி - III

பிரிவு - 1 2 x 4 = 8

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

31. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.
32. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழிநின்று கூறுக.
33. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
34. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

பிரிவு - 2 2 x 4 = 8

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா - நும் கருத்தை எழுதுக.
36. சமணப்பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
37. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

பிரிவு - 3 3 x 4 = 12

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

39. சொல் பின்வரும் நிலை யணியை சான்றுடன் விளக்குக.

(அல்லது)

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை சுட்டி விளக்குக.

40. பாடாண் திணை - சான்றுடன் விளக்குக

*(அல்லது)*

செந்துறை பாடாண்பாட்டுத் துறையைச் சான்றுடன் விளக்குக.

41. பின்வரும் பழமொழியை வாழ்வியல் நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) தன் கையே தனக்குதவி

*(அல்லது)*

ஆ) ஒற்றுமையே வலிமை

42. இலக்கிய நயம் பாராட்டுக:
*(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)*

மீன்கள்கோடி கோடிசூடி வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்.
வாழவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீளம் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீளம்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

- கவிமணி

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

43. தமிழாக்கம் தருக:

1. The Pen is mightier than the sword.
2. Winners don't dp different things, they do things differently
3. A Picture is worth a thousand words.
4. Work while you work and play while you play.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3 x 6 = 18**

44. அ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - மெய்ப்பிக்க.

*(அல்லது)*

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

*(அல்லது)*

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** **4 + 2 = 6**

47. அ) "உண்டால் அம்ம" - எனத் தொடங்கும் புறநானூறு பாடலை அடிமாறாமல் எழுதுக.

ஆ) "பெரிது" - என முடியும் குறட்பாவை எழுது.

********